ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2159/16 - 2020 ජනවාරි මස 22 වැනි බදාදා - 2020.01.22

*2159/16 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 22 ஆந் திகதி புதன்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (I) - பொது

## *சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும்*

*ச.அ.இல* : PS/CSA/*00/1/14/9*

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதியுத்தமராம் சனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அவர்களினால்**

(முத்திரை)

கோட்டாபய ராஜபக்ஷ.

1. *கௌரவ உப்பாலி அபேரத்ன அவர்கள்*
   *ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதியரசர்*
2. *கௌரவ தயா சந்திரசிறி ஜயதிலக்க அவர்கள்*
   *ஓய்வுபெற்ற மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்*
3. *சந்திரா பெர்னாண்டோ அவர்கள்*
   *ஓய்வுபெற்ற பொலிஸ்மா அதிபர்*

*ஆகியோருக்கு*

*வாழ்த்துக்கள் !*

*முறையே 2015, சனவரி மற்றும் ஓகத்து மாதங்களில் நடைபெற்ற சனாதிபதி தேர்தல் அத்துடன்/அல்லது பொதுத் தேர்தல்கள் ஆகியவற்றிற்கு முன்னர் பதவிகளை வகித்த அரசாங்க உத்தியோகத்தர்கள், அரசாங்கக் கூட்டுத்தாபனங்களின் ஊழியர்கள் மற்றும் ஆயுதப்படை மற்றும் பொலிஸ் சேவை ஆகியவற்றின் உறுப்பினர்கள் 2015, சனவரி 8 ஆந் திகதியிலிருந்து ஆரம்பித்து 2019, நவெம்பர்*

1A - G 31844— 392 (2020/01)

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

*16 ஆந் திகதி முடிவடையும் காலப்பகுதியில் அரசியல் பழிவாங்கலுக்கு தாம் உட்பட்டிருந்ததாக குற்றச்சாட்டுக்களை விடுத்துள்ளனர் என்று அறிக்கையிடப்பட்டுள்ளதாலும், அவை தொடர்பாக பரிசீலித்து, விசாரித்து அறிக்கையிடுவதற்காக திருத்தப்பட்டவாறான விசாரணை ஆணைக்குழுச்சட்டத்தின் (393 ஆவது உறுப்புரை) 2ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் இலட்சினைக்கமைய 2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 09 ஆந் திகதி வெளியிடப்பட்ட அதிகாரப் பத்திரத்தின் ஊடாக சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவொன்றை நியமித்துள்ளமையினாலும்,*

*அந்த அதிகாரப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இலஞ்சம் அல்லது ஊழல்கள் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு, இலங்கை பொலிஸ் நிதி குற்றங்களை புலனாய்வு செய்யும் மற்றும் /அல்லது இலங்கை பொலிசின் பொலிஸ் விசேட புலனாய்வுப் பிரிவு ஆகிய நிறுவனங்களுக்கு மேலதிகமாக அந்த அதிகாரப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள (அ) தொடக்கம் (இ) வரையிலான விடயங்கள் தொடர்பாக குற்றப்புலனாய்வுத் திணைக்களமும் உள்ளடங்க வேண்டுமென எனக்கு அறிக்கையிடப்பட்டுள்ளதாலும்,*

*மேலும் அவ்வாறான அரசியல் பழிவாங்கல்களுக்கு உட்படுத்தும் செயற்பாடுகள் மூலம் ஏற்பட்டதாக கூறப்படும் அரசியல் ரீதியாக பழிவாங்கல்களுக்கு உட்படுத்தப்பட்ட கால எல்லைக்குள் பிரதம மந்திரியின் அதிகார வரம்பின் கீழ் செயற்பட்டு ஊழல் எதிர்ப்பு நடவடிக்கைகள் தொடர்பாக செயற்படும் விசேட அலகொன்றின் ஊடாக அரசியல் பழிவாங்கல்கள் வழிநடத்தப்பட்டதனாலும் அதற்கு முன்னரான காலப்பகுதியில் அந்த ஊழல் எதிர்ப்பு அலகினால் யார் விசாரணை செய்யப்பட வேண்டும் என்பதை முதலில் தீர்மானித்து அதன் பின்னர் குறிப்பிட்ட முறைபாடுகள் இலஞ்சம் அல்லது ஊழல்கள் தொடர்பான சார்த்துதல்களை விசாரணை செய்வதற்கான ஆணைக்குழு, இலங்கை பொலிசின் நிதிக் குற்றச்சாட்டுக்களை புலனாய்வு செய்யும் பிரிவு மற்றும் /அல்லது இலங்கை பொலிசின் பொலிஸ் விசேட புலனாய்வுப் பிரிவு, குற்றப் புலனாய்வுத் திணைக்களம் அல்லது வேறு ஏதேனும் திணைக்களம் என்பவற்றிற்கு ஆற்றுப்படுத்தப்பட்டதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளதாலும்,*

*அவ்வாறு அரசியல் அழுத்தங்களுக்குள்ளான மூன்றாந் தரப்பின் தலையீடு காரணமாக ஏதேனுமொரு தரப்பினருக்கு நீதி நியாயம் வழங்குவதில் அல்லது நீதி நியாயம் வழங்குவதில் எவரேனும் நபருக்கு பாதிப்பு ஏற்படக் கூடும் என்பதுடன், முப்படையினர் மற்றும் இலங்கை பொலிஸ் உத்தியோகத்தர்கள் தொடர்பாக முன்வைக்கப்பட்டுள்ள முறைப்பாடுகள் சம்பந்தமாக குறிப்பிட்ட நிறுவனங்கள் நடவடிக்கைகளை எடுக்கும் போது தேசிய பாதுகாப்பு சம்பந்தமாக பாதகமான தாக்கங்கள் உள்ளதென எனது கவனத்திற்கு உட்படுத்தப்பட்டுள்ளமையினாலும்,*

*மேற்குறிப்பிட்ட அதிகாரப் பத்திரத்தின் (அ) தொடக்கம் (இ) வரையிலான விடயங்களில் குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு மேலதிகமாக அதிற் குறிப்பிடப்பட்ட அனைத்து இடங்களுக்கும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தை உட்புகுத்துவதற்கும், அதே போன்று விசாரித்து தகவல்களை பெற்றுக் கொள்ளும் பொருட்டு (அ) தொடக்கம் (இ) வரையிலான விடயங்களுக்கு மேலதிகமாக பின்வருமாறு அதாவது,*

*(உ) 2015, சனவரி மாதம் 08 ஆந் திகதி ஆரம்பித்து 2019, நவெம்பர் மாதம் 16 ஆந் திகதி முடிவடைந்த கால எல்லைக்குள் மேற்குறித்த நிறுவனங்களுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டுள்ள முறைப்பாடுகளில் இந்த அதிகாரப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மேற்குறித்த ஊழல் எதிர்ப்பு அலகினால் விசாரணைக்கு உட்படுத்தப்பட வேண்டியவர் இவர் என்பதை முதலில் தீர்மானித்து அதன் பின்னர் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டதாக கருதப்படும் சகல முறைப்பாடுகளையும் முப்படையினர் மற்றும் இலங்கை பொலிஸ் உத்தியோகத்தர்கள் தொடர்பில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தேசிய பாதுகாப்பு மீது அழுத்தங்களை ஏற்படுத்தக் கூடிய முறைப்பாடுகள் எவை என்பதை ஆராய்ந்து மேற்குறித்த மூன்றாந் தரப்பினரின் அழுத்தங்கள் காரணமாக நீதி நியாயம் வழங்குவதில் அல்லது நீதி நியாயம் வழங்குவதில் எவரேனும் நபரொருவர் பாதிக்கப்பட்டதாக கருதப்படும் பரிசீலனைகள், விசாரணைகள் அல்லது சட்ட நடவடிக்கைகளின் போது மற்றும் முப்படையினர் மற்றும் இலங்கைப் பொலிசார் மற்றும் அரசாங்க சேவை தொடர்பாகத் தேசிய பாதுகாப்பு மீது தாக்கங்களை ஏற்படுத்தும் பரிசீலனைகள், விசாரணைகள், சட்ட நடவடிக்கைகளின் போது மற்றும்/அல்லது வேறு ஏதேனுமோர் வகையில் பாதிக்கப்பட்டுள்ளதாக காணப்படும் சந்தர்ப்பங்களில் அவ்வாறு பாதிப்புக்குள்ளாகியமை அல்லது தேசிய பாதுகாப்பு மற்றும் அரசாங்க சேவை மீதான பாதகமான நிலைமைகளை தடுப்பதற்குத் தேவையான உடனடி நடவடிக்கைகளை எடுத்தல்;*

*என்பதை இத்தால் உள்ளடக்குகின்றேன்.*

*தங்களுடைய விவேகம், ஆற்றல் மற்றும் விசுவாசம் ஆகியவற்றில் பெரும் உறுதியும் நம்பிக்கையும் வைத்து மேற்குறித்த அதிகாரப் பத்திரத்தின் மூலம் நிறுவப்பட்டுள்ள விசாரணை ஆணைக்குழுவின் மேற்குறிப்பிடப்பட்டுள்ள பணிகளை செயற்படுத்துவதற்காக தேவைப்படும் அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்குமாறு தங்களுக்கு நான் இத்தால் விதிக்கின்றேன்.*

*இரண்டாயிரத்து இருபதாம் ஆண்டு சனவரி மாதம் 22 ஆந் திகதியான இன்று கொழும்பில் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் இலட்சினையின் கீழ் வழங்கப்பட்டது.*

*அதியுத்தமராம் சனாதிபதியின் கட்டளைப்படி,*

*பி. பீ. ஜயசுந்தர,*
*சனாதிபதியின் செயலாளர்.*

---

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*